පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் | ஆண்டிறுதிப் பரீட்சை - 2017 | கணிதம் |
|---|---|---|
| 6 | | I & II |


பாடசாலையின் பெயர் : ..........................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................

.......................................................................................... நேரம் 2.00 மணித்தியாலம்

பகுதி – I
எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01. தரப்பட்டுள்ள வட்டத்தின் மீதுள்ள புள்ளிகள் எவை ?




02. 3 நிமிடங்களை செக்கன்களில் தருக

03. $\frac{2}{5}$ , $\frac{1}{5}$ , $\frac{4}{7}$ , $\frac{3}{7}$ , $\frac{1}{4}$ ஆகிய பின்னங்களிலுள்ள அலகுப் பின்னங்கள் எவை. ?

04. 1 , 4 , 9 , ……… , ……… இவ் எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக

05. தரப்பட்ட அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக

| மட்டந்தட்டிய பெறுமானம் | கிட்டிய பெறுமானம் | குறைந்த பெறுமானம் |
|---|---|---|
| 30 | 34 | ……………… |

06. ஒரு பெட்டியினுள் 5 நீல நிறப்பந்துகளும் , 3 சிவப்பு நிறப்பந்துகளும் உண்டு. நீல நிறப்பந்துகளுக்கும் , சிவப்பு நிறப்பந்துகளுக்கும் இடையிலுள்ள விகிதம் யாது. ?

H.D.Fasmin B.Sc (Hons)



Scanned by CamScanner

07. ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 27 ஆகும். அவர்களில் $x$ எண்ணிக்கையான மாணவர்கள் ஒரு நாள் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை. சமூகமளித்தவர்களின் எண்ணிக்கையை ஒரு அட்சரகணித கோவையாகத் தருக.

08. அருகிலுள்ள அமைவுகளை அவதானித்து விடையளிக்க.

1. குளம் மரத்திற்கு எத்திசையில் உள்ளது. ?
2. குளத்திற்குத் தென்மேற்குத் திசையில் எது அமைந்துள்ளது.?





09. பெறுமானம் காண்க.

$$\begin{array}{r} 5.38 \\ -\ 2.59 \\ \hline \\ \hline \end{array}$$


10. சமனான நான்கு முக்கோண முகங்களைக் கொண்ட திண்ம உருவின் பெயரைக் குறிப்பிடுக.

11. தரப்பட்ட வரிப்படத்திலுள்ள கோணத்தின்

1. புயம் ஒன்றைத் தருக. ?
2. உச்சி எது. ?




12. அருகிலுள்ள உருவின் ஒரு சதுரத்தின் அளவு $2cm \times 2cm$ ஆகும். முழு உருவினதும் பரப்பளவைக் காண்க.




13. $2^3 \times 5^2$ இன் பெறுமானம் யாது. ?



H.D.Fasmin B.Sc (Hons)

Scanned by CamScanner

14. சேர்த்தி எண்ணாகவும் , முக்கோண எண்ணாகவும் , சதுர எண்ணாகவும் அமையும் ஓர் எண்ணைத் தருக.

15. $7^3$ என்ற சுட்டியை வாசிக்கும் முறையை எழுதுக.

16. இடைவெளி நிரப்புக $5375\,g =$ ……………$kg$ ……………. $g$

17. $y = 3$ எனின் $y + 12$ இன் பெறுமானத்தைக் காண்க

18. அண்ணனின் உயரம் $135cm$ உ , தம்பியின் உயரம் $85cm$ உம் ஆகும். இருவரினதும் மொத்த உயரம் யாது ?

19. 15 இன் காரணிகளை எழுதுக

20. கழிக்க

| | மணி | நிமி |
|---|---|---|
| | 7 | 18 |
| − | 3 | 24 |
| | | |

H.D.Fasmin B.Sc (Hons)



Scanned by CamScanner

## பகுதி – 2

முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

1. (*a*) உமது வகுப்பறையில் கணிப்பீடு தொடர்பாக 'தரவுகளை வகைக்குறித்தலும் சேகரித்தலும்' என்ற அலகைக் கவனத்திற் கொண்டு பின்வருவனவற்றுக்கு விடையளிக்க .

*i.* தரவுகள் சேகரிக்கும் முறை ஒன்றைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

------------------------------------------------------------

*ii.* சேகரிக்கப்பட்ட தரவுகளை வகைக்குறிக்கும் முறைகள் 2 தருக. (2 புள்ளிகள்)

------------------------------------------------------------

------------------------------------------------------------

*iii.* படவரைபொன்றிலே ○ = 12 மாணவர்களைக் குறிப்பின் மூன்று மாணவர்களைக் காட்டும் பட வரைபைத் தருக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

(*b*) பழக்கடை ஒன்றில் ஏப்ரல் மாதத்தின் முதல்வாரத்தில் விற்பனை செய்யப்பட்ட வத்தகைப்பழங்களின் எண்ணிக்கையைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. ○ = 4

| நாள் | பழங்களின் எண்ணிக்கை | வரவுக்குறி | படவரைபு |
|---|---|---|---|
| திங்கள் | 10 | | |
| செவ்வாய் | 12 | | ○ ○ ○ |
| புதன் | 9 | | |
| வியாழன் | 11 | | |
| வெள்ளி | 6 | | |

*i.* அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக. (6 புள்ளிகள்)

*ii.* கூடுதலான விற்பனை நடைபெற்ற நாள் எது ? (2 புள்ளிகள்)

------------------------------------------------------------

*iii.* ஒரு பழத்தின் விலை ரூபா 30 எனின் வெள்ளிக்கிழமை விற்பனையின் மூலம் பெற்ற வருமானம் யாது?. (2 புள்ளிகள்)

------------------------------------------------------------

*iv.* மிகக் கூடிய விற்பனை நடைபெற்ற நாளின் வருமானத்திற்கும் மிகக் குறைந்த விற்பனை நடைபெற்ற நாளின் வருமானத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசம் யாது ? (2 புள்ளிகள்)

------------------------------------------------------------

H.D.Fasmin B.Sc (Hons)

Scanned by CamScanner

2. $(a)$ *i.* சுருக்குக. 0.5 + 0.95 (2 புள்ளிகள்)

------------------------------------------------------------

*ii.* முதல் ஐந்து , 5 இன் மடங்குகளை எழுதுக. (1புள்ளி )

------------------------------------------------------------

*iii.* 50425 என்ற எண்ணில் 4 இனால் வகைக்குறிக்கும் எண்ணின் பெறுமானம் யாது ? (2புள்ளி )

------------------------------------------------------------

*iv.* 4 இனால் வகைக்குறிக்கப்படும் எண் , 2 இனால் வகைக்குறிக்கப்படும் எண்ணின் பெறுமானத்தின் எத்தனை மடங்காகும். ? (2புள்ளிகள் )

------------------------------------------------------------

$(b)$ ' சீமா ' தனக்குச் சொந்தமான காணியின் $\frac{1}{4}$ ஐ விற்றாள். $\frac{3}{7}$ பங்கை மகளுக்குக் கொடுத்தாள்.

*i.* மேலே தரப்பட்ட பின்னங்கள் தொடர்பாக சரியான கூற்றைத் தெரிக. (1புள்ளி )

(அ) இரண்டு பின்னங்களும் முறைமைப் பின்னங்களாகும்.

(ஆ) இரண்டு பின்னங்களும் அலகுப் பின்னங்களாகும்.

*ii.* இடைவெளி நிரப்புக. $\frac{2}{5} = \frac{2 \times 2}{5 \times \ldots\ldots} = \frac{4}{\ldots\ldots\ldots}$ (1புள்ளி )

*iii.* $\frac{3}{8} + \frac{2}{4}$ ஐக் கூட்டுக. (2புள்ளிகள் )

------------------------------------------------------------

------------------------------------------------------------

H.D.Fasmin B.Sc (Hons)

3. சுருக்குக

*i.*

| | $m$ | $cm$ |
|---|---|---|
| | 5 | 5 |
| + | 2 | 45 |
| | | |

*ii.*

| | $l$ | $ml$ |
|---|---|---|
| | 7 | 000 |
| − | 3 | 005 |
| | | |


(4புள்ளிகள் )

*iii.* $\frac{3}{5}$ , $\frac{3}{7}$ , $\frac{3}{6}$ , $\frac{3}{15}$ ஆகியவற்றை ஏறுவரிசைப் படுத்துக (2புள்ளிகள் )

------------------------------------------------------------

*iv.* இங்கு தரப்பட்டுள்ள இணைகரத்தின் சுற்றளவு யாது ?

----------------------------------------




(2புள்ளிகள் )



Scanned by CamScanner

*v.* ஒரு தாவர எண்ணெய் $250ml$ ,$500ml$ ,$1l$ , $2l$ ,$4l$ என ஐந்து வகைக் கொள்கலன்களில் விற்பனை செய்யப்படுகின்றது.

(அ) $500ml$ எண்ணெய் வாங்க உத்தேசிக்கும் ஒருவர் அவ்வெண்ணையை வாங்கும் முறைகள் 2 ஐக் குறிப்பிடுக.

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------(2புள்ளிகள் )

(ஆ) $3l\ 600ml$ ஐ மில்லிலீற்றரில் தருக. (1புள்ளி)

------------------------------------------------------------------------

4. $(a)$ *i.* 7 இன் 2வது மடங்கு யாது. ? (1 புள்ளி)

*ii.* 7 இன் 2 ஆம் வலுவின் பெறுமானம் யாது. ? (1 புள்ளி)

*iii.* 81 ஐ 9 இன் வலுவாக எழுதுக. (1 புள்ளி)

$(b)$ *i.* $8^2$ என்பதன் அடி , சுட்டி என்பவற்றை எழுதுக. (2 புள்ளிகள்)

*ii.* $2^2 \times 5^2 \times 3$ இன் பெறுமானத்தைக் காண்க. (2 புள்ளிகள்)

$(c)$ இடைவெளி நிரப்புக.

*i.* $125 = 5^{\square}$ *ii.* $--- = 2^7$ (2 புள்ளிகள்)

*iii.* <, >, = என்ற குறியீடுகளைப் பொருத்தமானவாறு இடைவெளிகளில் எழுதுக.

(அ) $3^2$ -- 6 (ஆ) $3^4$ ……… $9^2$ (2 புள்ளிகள்)

5. $(a)$ *i.* இடைவெளி நிரப்புக $24 = 1 \times$ ………

$24 = 2 \times$ ……..

$24 = 3 \times$ ……..

$24 = 4 \times$ …….. (2 புள்ளிகள்)

*ii.* 24 இன் காரணிகளை எழுதுக. (2 புள்ளிகள்)

*iii.* 24 இன் முதன்மைக் காரணிகளை எழுதுக. (3 புள்ளிகள்)

$(b)$.$(i)$ $1 + 2 + 3 + 4 + 5 + 6$ இன் பெறுமானம் யாது.? (1 புள்ளி)

$(ii)$. நீர் மேலே பெற்ற விடையானது எத்தனையாவது முக்கோண எண்ணாகும். ? (2 புள்ளிகள்)

$(iii)$ அடுத்தடுத்த முக்கோண எண்கள் இரண்டின் கூட்டுத் தொகை எவ்வகை எண்ணாகும். ? (2 புள்ளிகள்)

H.D.Fasmin B.Sc (Hons)



Scanned by CamScanner

6. $(a)$ $i.$ $5:3$ எனும் விகிதத்திற்கு இரண்டு சமவலு விகிதங்கள் இரண்டு எழுதுக.

(4 புள்ளிகள்)

$ii.$ நான்கு ஏழிற்கு என்பதை விகிதமாக எழுதுக. (1 புள்ளி)

$iii.$ இருபது, இருபத்து ஏழிற்கு என்பதை விகிதமாக எழுதுக. (1 புள்ளி)

$(b)$ செவ்வகவடிவான காணி ஒன்றின் நீளம் $18m$ உம் அகலம் $12m$ உம் ஆகும்.

$i.$ இதன் சுற்றளவு யாது.? (2 புள்ளிகள்)

$ii.$ இதன் நீளம் , அகலம் என்பவற்றுக்கிடையிலான விகிதம் யாது. ? (2 புள்ளிகள்)

$iii.$ $4 : 5$ என்ற விகிதத்தைச் சொற்களில் எழுதுக. (1 புள்ளி)

7. $(a)$ ஒரு கொப்பியின் விலை ரூபா $x$ ஆகும்

$i.$ இதன் விலை ரூபா 15 ஆல் அதிகரித்தால் கொப்பியின் புதிய விலைக்கான அட்சரகணிதக் கோவையை எழுதுக. (2 புள்ளிகள்)

$ii.$ விலை அதிகரிப்பதற்கு முன்பு ரூபா 100 ஐக் கொடுத்து ஒரு கொப்பியை வாங்கினால் கிடைக்கும் மீதிப் பணத்திற்கான கோவையை எழுதுக. (2 புள்ளிகள்)

$iii.$ விலை அதிகரிப்பிற்கு முன் மூன்று கொப்பிகளைக் கொள்வனவு செய்தால் செலுத்த வேண்டிய பணத்திற்கான கோவையை எழுதுக. (2 புள்ளிகள்)

$(b)$ $i.$ கூட்டுக.

| | $kg$ | $g$ |
|---|---|---|
| | 17 | 650 |
| + | 4 | 750 |
| | | |

(2 புள்ளிகள்)

$ii.$ $2kg$ , $300g$ , $4kg$ ஆகிய திணிவுகளுடன் $3kg$ , $400g$ ஆகியவற்றைக் கூட்டினால் பெறப்படும் திணிவைக் $kg$ இல் தருக. (3 புள்ளிகள்)

H.D.Fasmin B.Sc (Hons)



Scanned by CamScanner